

கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தஞ்சை நாடாளுமன்ற தொகுதி ‘இந்தியா’ கூட்டணியின் கழக வேட்பாளர் ச.முரசொலி சென்னை குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார் ஆகியோர் உள்ளனர்.

### கர்நாடக இசைப் பாடகர் டி.எம்.கிருஷ்ணாவின் திறமை எவராலும் மறுதலிக்க முடியாதது!

# ‘சங்கீத கலாநிதி’ விருதுக்குத் தேர்வாகியுள்ள சிறந்த பாடகர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு அன்பான வாழ்த்துகள்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!



**சென்னை, மார்ச் 25 -**

**“மியூசிக் அகாடமியின் ‘சங்கீத கலாநிதி’ விருதுக்குத் தேர்வாகியுள்ள சிறந்த பாடகர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு எனது அன்பார்ந்த வாழ்த்துகள்!” என, தமது வலைதளப் பதிவில் வாழ்த்தியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!**

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு : -

“சிறந்த பாடகர் டி.எம்.கிருஷ்ணா அவர்கள் ‘மியூசிக் அகாடமி’யின் ‘சங்கீத கலாநிதி’ விருதுக்குத் தேர்வாகி இருப்பதற்கு எனது அன்பான வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிருஷ்ணா அவர்கள் கொண்டுள்ள முற்போக்கு அரசியல் நிலைப்பாடுகளினாலும், அவர் எளியோரைப் பற்றித் தொடர்ந்து பேசி வருவதாலும் ஒரு தரப்பார் காழ்ப்புணர்விலும் உள்நோக்கத்துடனும் விமர்சிப்பது வருத்தத்துக்குரியது.

இதில் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட மானுட சமத்துவத்துக்காகவும் பெண்கள் சரிநகர் சமானமாக வாழ்ந்திடவும் முக்கால் நூற்றாண்டு காலம் அறவழியில், அமைதிவழியில் போராடிய தந்தை பெரியாரைத் தேவையின்றி வசைபாடுவது நியாயமல்ல. பெரியாரின் தன்னலமற்ற வாழ்க்கை வரலாற்றையும், அவரதுசிந்தனைகளையும் படிக்கும் எவரும் இப்படி அவதூறுச் சேற்றை வீச முற்பட மாட்டார்கள்.

கிருஷ்ணா அவர்கள் இசைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புகளுக்கு உரிய மரியாதையையும் அங்கீகாரத்தையும் வழங்கிடும் வகையில் தகுதியானவரைத் தேர்ந்தெடுத்த மியூசிக் அகாடமி நிர்வாகிகள் நம் பாராட்டுக்கு உரியவர்கள்.

டி.எம்.கிருஷ்ணா எனும் கலைஞனின் திறமை எவராலும் மறுதலிக்க முடியாதது. அரசியலில் மத நம்பிக்கைகளைக் கலந்தது போல, இசையிலும் குறுகிய அரசியலைக் கலக்க வேண்டாம்! விரிந்த மானுடப் பார்வையும், வெறுப்பை விலக்கி, சக மனிதரை அரவணைக்கும் பண்புமே இன்றைய தேவை!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# அம்பத்தூரில் வாக்கு சேகரிப்பு!

*சென்னை, மார்ச் 24-*

*சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பின்படி, வருகின்ற நாடாளுமன்ற மக்களவை தேர்தலை முன்னிட்டு, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. (வடக்குப் பகுதி செயலாளர்), 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி எம்.சி, தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ் பி.இராஜகோபால் எம்.சி. (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர்) ஆகியோரின் முன்னிலையில் 89வது வட்டக் செயளாலரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் நேற்று முன்தினம் (23.03.2024) மாலை 5.00 மணிக்கு வட்ட வடிவ நகரில் உள்ள கட்சி அலுவலகத்திலிருந்து தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது. அனைத்து கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், 89வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA 2 பாக நிலை முகவர்கள், BLC முகவர்கள், வட்ட இளைஞரணி, மகளிர் அணி, மாணவர் அணியினர், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துக் கொண்டு 89வது வட்டத்திற்கு உட்பட்ட வட்ட வடிவ நகரில் வீடு வீடாக சென்று திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தனர்.*

# சைதையில் வேட்பாளர் தமிழச்சி தங்கப்பாண்டியனை ஆதரித்து கூட்டம்!

*சென்னை, மார்ச் 25 -*

*சைதை மேற்குப் பகுதி 139 அ வட்டக்கிளை நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம். 22.03.2024 மாலை. 7 மணியளவில் இடம்.47/137 மேற்கு ஜோன்ஸ் சாலை (ஆர்.சுரேஷ் இல்ல மாடியில்) வட்ட அவைத் தலைவர் இ.வரதன். தலைமையிலும், வட்டக் கழகச் செயலாளர் சை.மு.சேகர் , வட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் வி.பி.ஜானகிராமன், எம்.எஸ்.ஹரிபாபு ஆகியோரது முன்னிலையில் நடைபெற்றது.*

*இக்கூட்கூட்டத்தில் பகுதி செயலாளர்.10 வது மண்டலக் குழுத் தலைவர். எம்.கிருஷ்ணமூர்த்தி நாடாளுமன்ற தேர்தல் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் இந்தியா கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடும் முனைவர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து ஆற்ற வேண்டிய களப் பணிகள் குறித்தும் இல்லந்தோறும் சென்று வாக்காளர்களை காலை மாலை இருவேளையும் சந்தித்து இரண்டரை ஆண்டுகால தலைவர் தளபதி அவர்களின் சாதனைகளைக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குசேகரிக்க வேண்டும் என பேசினார்.*

*கூட்டத்தில் சைதை.ஆர்.ரமேஷ், மா.ஏழுமலை, சுமதி தீனதயாளன், பூபதி. வெங்கடேசன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன், ப.நரேஷ், ஜி.ஏழுமலை, கொடி.து. சுரேஷ்பாபு, டி.கோபால கிருஷ்ணன், எஸ் முகமது அலி, யமஹா.ராஜேஷ், சார்ப்.சரவணன், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என்.ரமேஷ், எஸ்.கண்ணன், ஆர்.பெருமாள், ஆர்.தாமோதரன், ப.சிவகுமார், எஸ்.சையத்ஜலால், மு. காத்தவராயன், வி.வெங்கடேசன், துளசி சந்திரசேகர், ஆட்டோ.சேகர், வி.ஆதிகேசவன், த.சேகர், தோட்டம். ஆர்.ஜவகர், ப.தினகரன், டைல்.ராதாகிருஷ்ணன், எஸ்.முருகன், ஆர்.கண்ணன், எம்.சுந்தரேசன், ஜோ. அந்தோணி, ஜெ.தமிழ்ச்செல்வன், டி.ஜானகிராமன், ப.மோகன் போட்டோ. ரவி, எஸ்.சந்தான கிருஷ்ணன், மோ.பிரபுராம் ஜி.சீனி வாசன், கே.வேலாயுதம், ஜெ. வெங்கடேஷ், தீ. உதயசூரியன், பச்சையப்பன் மற்றும் பலர் பங்கேற்றனர்.*



தலைமைச் செயலகத்தில் 23.03.2024 அன்று தலைமைத் தேர்தல் அதிகாரி / அரசு முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தலைமையில், மக்களவை பொதுத் தேர்தல் 2024 தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைத் தேர்தல் அலுவலர் சங்கர் லால் குமாவத், இணை தலைமைத் தேர்தல் அலுவலர் எச்.எஸ்.ஸ்ரீகாந்த் மற்றும் தேர்தல் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கோவையில் கழக வர்த்தக அணி சார்பில் அணியின் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கலைவிழாவில் திரைப்பட இயக்குநர் கே.பாக்கியராஜ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

### கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமையில் கழக வர்த்தக அணி சார்பில்

# கோவையில் கலைஞர் நூற்றாண்டு கலைவிழா!

## இயக்குநர் கே. பாக்கியராஜ் சிறப்புரை!

*கோவை, மார்ச் 25-*

*கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க. வர்த்தக அணி சார்பில் தமிழகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. அதன் தொடர்ச்சியாய் கோவை மண்டலம் சார்பில் கலை இலக்கிய நாடகத் திருவிழா கோவை காளப்பட்டி சாலையில் உள்ள சுகுணா ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில் இயக்குநர் கே.பாக்கியராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.*

*விழாவிற்கு தி.மு.க. வர்த்தகர் அணிச்செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமை தாங்கினார். நிகழ்வில் கோவை மாநகர் மாவட்ட செயலாளர் கார்த்திக். கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி. வர்த்தகர் அணி மாநில துணைத்தலைவர் மூர்த்தி, வர்த்தகர் அணி மாநில இணை செயலர் திண்டுக்கல் ஜெயன், வர்த்தக அணி துணைச்செயலாளர்கள் பல்லவி ராஜா, தர்மசெல்வன், கோவை மாவட்ட அமைப்பாளர்கள் மாரிச்செல்வன், வேல்சாமி. கண்ணன் முன்னிலை வகித்தனர். கோவை மாநகர் மாவட்ட துணை அமைப்பாளர் சந்தீப்ராஜா ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு திறம்பட நடத்தினார்.*

*விழாவில் திருப்பூர் சுப்பிரமணி. தங்கராஜீ, நீலகிரி ரஹமத்துல்லா. சேலம் மணிவேல், வெங்கடேசன், பன்னீர்செல்வம். சேலம் சசிகுமார். சேலம் செல்வி மெஸ் பழனிசாமி. சேலம் பாண்டித்துரை. கரூர் மனோகர். ஈரோடு மகாலிங்கம். ராஜேந்திரன். தர்மபுரி தாமோதிரன், தர்மபுரி கிழக்கு துரைசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் இயக்குநர் கே.பாக்கியராஜ் பேசியதாவது:*

*தன்மானத்திற்காக. சுயமரியாதைக்காக தி.மு.க.வில் சேர்ந்தேன். கலைஞர் முதல்வராக பிரச்சாரம் செய்தேன்.*

*முதலமைச்சராக கலைஞர் இருந்தபோது வறுமையை. பசி, பட்டினியை ஒழித்தார். கலைஞர் எப்படி மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றியது போலவே இன்றைய முதல்வர் மு.க. ஸ்டாலின் பெண்களுக்கு இலவச பேருந்து உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் “முதல்வராக” பதவி ஏற்ற போது, அவருடைய மனைவி துர்கா ஸ்டாலின் கண்ணில் கண்ணீர் வந்தது. “அதனை பார்த்து எனக்கும் கண்ணீர் வந்தது”.*

*எம்.ஜி.ஆர் மறைவுக்கு பிறகு நான் ஏதோ கருத்து சொன்னேன் என்பதற்காக ஜெயலலிதா கூட்டம் என் படம் ஓடும் தியேட்டர் முன்பு தகராறு செய்தனர். படம் தடுமாறத் தொடங்கியது.*

*முன்பே நான் படத்தை விற்று விட்டேன். விநியோகஸ்தர்கள் “சார் நீங்க கொஞ்சம் கலைஞரை திட்டி ஒரு அறிக்கை விட்டால் எல்லாம் சரியாகிவிடும்” என்று வற்புறுத்துகின்றனர்.*

*என்படம் ஓடுவதற்காக, ஒரு தவறும் செய்யாத கலைஞரை நான் திட்டும் அளவு பண ஆசை பிடித்தவன் என்றா என்னை நினைத்தீர்கள் அது ஒரு நாளும் நடக்காது எனக்கூறி திருப்பி அனுப்பினேன். அவர் திரைக்கதை வசனத்தால் தான் எனக்கு சினிமாவில் ஒரு ஈர்ப்பு வந்தது.*

*முத்தமிழ் அறிஞர் கலைஞர் “அரசியல். சினிமா” என்று பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்.*

*அந்தக்காலத்தில் சினிமாவில் எம்.ஜி.ஆர். சிவாஜி பெயர் டைட்டலில் போட்டால் எப்படி கையொலி எழுப்பினார்களோ. அதே போல் கலைஞர் என்கிற பெயரை கண்டவுடனே தியேட்ட ரில் கை தட்டல் பறக்கும். கலைஞருக்கு ஒரு ரசிக வட்டம் திரைவானில் தமிழகம் முழுவதும் உண்டு.*

*எம்.ஜி.ஆருடன் நான் நெருக்கமாக இருந்தாலும். கலைஞருடனும் அரசியல், சினிமா என என் தொடர்பு உண்டு. அதையே எம்.ஜி.ஆரும் விரும்பினார்.*

*ஒருமுறை நான் அ.தி.மு.க. பிரச்சார குழுவில் எனக்கு இடம் தரும்படி எம்.ஜி.ஆரிடம் கேட்டேன். எம்.ஜி.ஆர் அது உனக்கு வேண்டாம். என் திரை உலக வாரிசு என உன்னை நான் சொன்னேன் அதுபோதும். தி.மு.க. காரர்கள் கொள்கை பிடிப்பான வர்கள். அவர்கள் முன் நீ கலைஞரை திட்டினால், தி.மு.க. காரன் உன் படத்தை பார்க்க மாட்டான். எல்லோரும்*

*பார்த்தால்தான் உன் படம் நன்றாக ஓடும் என்றார். அந்த அளவுக்கு கலைஞர் மீது மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார்.*

*இவ்வாறு இயக்குநர் கே.பாக்கியராஜ் பேசினார்.*

*நிகழ்ச்சியில் திண்டுக்கல் சக்தி குழுவினரின் தப்பாட்டம், ஒயிலாட்டம். சிலம்பாட்டம் நடந்தது. கலைஞரின் கைவண்ணத்தில் உருவான பூம்புகார் படம் நாடகமாக பேராசிரியர் பாரதி ராஜா. வழக்கறிஞர் சினேகா குழுவினர் சிறப்புடன் இரவு 11.00 மணி வரை நடந்தது.*

*விழாவில் திரைப்பட இயக்குனர், தயாரிப்பாளர், இசை அமைப்பாளர், பாடகர், நடிகர், கதை வசன கர்த்தா கே.பாக்யராஜ் கலைஞருக்கும் எம்.ஜி.ஆருக்குமான உறவை வெளிப்படுத்தினார்.*



ஜனநாயகம் காக்கும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் நீலகிரி மற்றும் திருப்பூர் தொகுதிகளில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வரும் ஏப்ரல் 12ம் தேதி அன்று தேர்தல் பரப்புரை மேற்கொள்ளவுள்ள அவினாசி, பழங்கரை ஊராட்சி வேலூர் பிரிவில் அமையவுள்ள திடலை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் நேரில் பார்வையிட்டார். இதில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், பொருளாளர்சு.சாமிநாதன்,தலைமைசெயற்குழுஉறுப்பினர்எஸ்.சரவணன்நம்பி,ஒன்றியகழகசெயலாளர்கள்ஈ.ப.சிவப்பிரகாஷ், க.பால்ராஜ், தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கோகுல் கிருபாசங்கர், மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் வெ.ராதாகிருஷ்ணன், வர்த்தகர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.மணி, நிர்வாகி சிவபாலன், பொன்னுச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.